அறிவதற்கும் அம்மாதிரி துறைகளிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கும் இந்த அரசு ஏதாவது வழி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : வாய்ப்புகள் தந்தால் பெண்கள் எல்லா துறைகளிலும் இன்றைக்கு சிறப்பாக செயல்பட முடியும். இந்திய நாட்டின் பிரதமரே ஒரு பெண்ணுக இருக்கிற காரணத்திஞல் வாய்ப்புகள் தரவேண்டும். அந்த வாய்ப்புகளை இன்றைக்கு நாம் அதிகமாக தருவதில்லை. இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக, மிக மிகப் பிற்போக்காக இருக்கிற பின் தங்கிய கிராம மக்களுக்குத் தான் இந்த திட்டங்களை எல்லாம் வகுத்திருக்கிறோம். படித்த பெண்கள் இன்றைக்கு எல்லாவிதமான வேலைகளிலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். அலுவலகங்களிலே, ஆலைகளிலே கூடப் பணி ஆற்றுகிறார்கள். எனவே, மிகத் பின் தங்கிய குக்கிராமங்களில் இருக்கிற பெண்களுக்கெல்லாம் துணிவு ஏற்படுத்தி, அவர்களுக்கு இருக்கிற அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து, அவர்களும் சமமாக வரவேண்டு மென்ற நல்ல நோக்கத்தோடு வீட்டிலே அடைக்கப்பட்டிருந்த பெண்களை எல்லாம் இதுபோன்ற மகளிர் மன்றங்கள் மூலமாக ஒரு நிலையிலே கொண்டு வந்து தங்களாலே பல காரியங்களைச் செய்ய முடியும. தங்களுக்கும் சில உரிமைகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து பணியாற்றவேண்டுமென்ற நிலையில் அரசு திட்டங்கள் தீட்டி வருகின்றது. பெண்கள் நல்ல முறையில் இந்த இல்லங்களை நடத்துகிறார்கள், இந்த நிலையங்களை நடத்துகிறார்கள், இந்த தொழில்களை நடத்துகிறார்கள், எனவே, அவர்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்றுதான் பல நல்ல திட்டங்களை எல்லாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு உருவாக்கிக் கொண்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வெளிநடப்பு செய்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேரவைக்கு திரும்பி வந்தது குறித்து.

திரு. க்ரு. சீமைச்சாமி : ஆன் எ. பாய்ண்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் ஆதித்தஞர் அவர்கள் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கவேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் இந்த பட்ஜெட் கூட்டத்திலே கலந்துகொள்ளப் போவதில்லை என்று வெளியே சென்றார்கள். இன்றும் இந்த பட்ஜெட் தொடர் கூட்டம் தான் நடைபெறுகிறது. சொன்ன சொல்லைக் காப்பற்ருமல் வந்திருக்கிறார்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் வருவதும் போவதும் அவர்களுடைய உரிமை. ஒரு உறுப்பினருடைய உரிமைப்பற்றி கேள்வி கேட்பதற்கு இன்னொரு உறுப்பினருக்கு உரிமை கிடையாது. ஆகவே, எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும், எழவில்லை என்று தெரிவித்துகொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம் .

(அ) தூத்துக்குடி நகராட்சி மன்ற மதிய உணவுக் கமிட்டியில் நிதி பற்றுக்குறையும் மதிய உணவு சரிவர வழங்கப்படாமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்டின் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள், ஆதாவது— மு.ப. 10-00

"நெல்லை மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி நகராட்சி மன்றத்தில் மதிய உணவுக் கமிட்டியில் சுமார் ரூ. 5,000 (ஐயாயிரம்) குறைவு ஏற்பட்டு,